DEPOSITION OF WITNESS
(In the Court of the Subordinate Judge`s Sankarankovil )
MCOP.No.31/2015
****

| | |
|---|---|
| Deposition of Witness for | : PW1 |
| Name | : செந்தூர்பாண்டியன் |
| Father`s Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 08.11.2019 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of.

**முதல் விசாரணை தொடர்ச்சி :**

சாட்சி இன்றைய தினம் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு, முதல் விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டார்.

நான் மனுதாரர். எனது முதன்மை சாட்சியத்தை நிரூபண ஆணை உறுதி ஆவணமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண ஆணை உறுதி ஆவணம் எனது தகவலின் பேரில் தான் தயார் செய்யப்பட்டது. அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். வழக்கு விபத்து சம்மந்தமாக திருவேங்கடம் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட கு.எண்.63/2014க்கான முதல் தகவல் அறிக்கை காவல் அதிகாரியின் சான்று நகல் ம.சா.ஆ.1. என்னுடைய காயச் சான்றிதழ் காவல் அதிகாரியின் சான்று நகல் ம.சா.ஆ.2. டி.என்.76 ஆர் 2655 என்ற எண்ணுடைய டி.வி.எஸ். மோட்டார் சைக்கிளுக்கான மோட்டார் வாகன ஆய்வறிக்கை காவல் அதிகாரியின் சான்று நகல் ம.சா.ஆ.3. மேற்படி குற்ற வழக்கில் தயார் செய்யப்பட்ட பார்வை மகஜர், மாதிரி வரைபடம் ஆகியவற்றின்

காவல் அதிகாரியின் சான்று நகல்கள் முறையே ம.சா.ஆ.4 மற்றும் ம.சா.ஆ.5. என்னுடைய அடையாளம் மற்றும் முகவரியைக் காட்டக் கூடிய குடும்ப அட்டையின் அசல் கொண்டு வந்துள்ளேன். அசல் அன்றாட பயன்பாட்டிற்கு தேவைப்படுவதால் நகல் தாக்கல் செய்கிறேன்.அது ம.சா.ஆ.6. மேற்படி குற்ற எண்ணில் தயார் செய்யப்பட்ட பிரிவு மாற்ற அறிக்கை காவல் அதிகாரியின் சான்று நகல் ம.சா.ஆ.7. எனக்கு எடுக்கப்பட்ட நுண்கதிர் படங்கள் 2 எண்ணம் ம.சா.ஆ.8 வரிசை ஆகும். நான் மாவட்ட மருத்துவக் குழுமம் முன்பு ஆஜராகி எனக்கு வழங்கப்பட்ட இயலாமை சான்று நீ.ம.சா.ஆ.1. மனுப்படி உத்தரவிட கேட்டுக் கொள்கிறேன்.

கு.வி:

எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை. நீதியின் நலன் கருதி வழக்கானது குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்டது.